**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்.**

MCOP No:45/2024 நாள் 13.11.2025

மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் இருந்து ஆவண காப்பகத்தில் இருந்து சாட்சிய சம்மனில் கண்டவாறு ஆவணங்களை கொண்டு வந்து தாக்கல் செய்து சாட்சியம் அளித்துக்கொள்ள வேண்டி நீதிமன்றத்தில் இருந்து சாட்சிய சம்மன் எடுத்துக்கொள்ளப்பட்டு சார்பாகி சாட்சி ராமசாமி என்பவரை ம.சா.2 ஆக 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திரு.K.மாரிராஜா என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | தாலுகா | |
| த-பெ | சுந்தரம் | தொழில் | ஆவண காப்பக உதவியாளர், மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை |
| கிராமம் | | வயது | 48 |

**முதல் விசாரணை**

நான் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் தற்போது ஆவண காப்பக உதவியாளராக பணிபுரிகிறேன். நான் அந்த மருத்துவமனையில் 2012ம் ஆண்டு முதல் பணிபுரிகிறேன். நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி அளித்துகொள்ள வழங்கப்பட்ட அனுமதி கடிதம் **ம.சா.ஆ.21**. கடந்த 24.08.2023ம் தேதி சாலை விபத்தில் ஆர்.மனோஜ் பாண்டியன் த/பெ.ராஜேந்திரன் என்பவர் காயமடைந்து இறந்துபோயுள்ளார். அவர் எங்களது மருத்துவமனைக்கு 24.08.2023ம் தேதி இரவு 10.00 மணியளவில் சிகிச்சைக்கு கொண்டுவரப்பட்டார். மேற்படி மனோஜ்பாண்டி என்பவர் எங்களது மருத்துவமனையில் அவரை முதலில் வெளி நோயாளியாக சேர்க்கப்பட்டு பின்பு உள் நோயாளியாக சேர்க்கப்பட்டார். அவர் எங்கள் மருத்துவமனையில் அவர் வெளிநோயாளியாக 24.08.2023 ல் சேர்க்கப்பட்டு 25.08.2023ம் தேதி அவரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். மேற்படி மனோஜ்பாண்டி என்பவர் எங்கள் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார் அதற்கான மருத்துவ குறிப்பேடு உண்மை நகல் தாக்கல். அது **ம.சா.ஆ.22**. 25.08.2023ம் தேதியில் அதிகாலை 01.03 மணியளவில் அவரை உள்நோயாளியாக சேர்க்கப்பட்டார். 25.08.2023ம் தேதியில் மதியம் 03.42 மணியளவில் மருத்துவமனையில் இருந்து அவரை விடுவிக்கப்பட்டார். அவரை எங்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு அவரை மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஸ் செய்யப்பட்டதற்கான மருத்துவ குறிப்பேடு உண்மை நகல் அது **ம.சா.ஆ.23**. அவர் எங்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்ற மருத்துவ செலவினங்களுக்கான தொகை ரூ.1,36,486/- மேற்படி மருத்துவ பில்களுக்கான உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் .அது **ம.சா.ஆ.24.**

**<u>குறுக்குவிசாராணை எதிர்மனுதார் தரப்பில்</u>**

மனோஜ்பாண்டியன் எங்கள் மருத்துவமனையில் எத்தனை நாட்களாக உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்று வந்தார் என்றால் அன்றைய ஒரு தினமே உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அன்றைய தினமே டிஸ்சார்ஸ் செய்யப்பட்டார். மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு எங்களது மருத்துவமனையில் இருந்து பரிந்துரைக்கப்பட்டாரா என்று கேட்டால் அவரை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டார்.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 13th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.